பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
# The EELA NADU

மலர்: 19 வைகாசி 25 ஜ: ஆகிர்: 19 இதழ்: 113
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 7-6-77

## முகிலைக்கிழித்துவரும் முழுமதி தி. மு. க.!
## நம்மவர் ஆட்சி தமிழகத்தில் மலரட்டும்!!

### வானொலியில் கருணாநிதி உரை




சென்னை. ஜூன் 6 'தி மு க ஆட்சியில் யாரும் பட்டினி கிடந்தது கிடை யாது, விரதமிருந்திட வேண் டும் என்று ஏழை ஆட்சி எவ ரையும் வற்புறுத்திடவும் இல்லை, நம்மவர் ஆட்சி, நல் லாட்சி தமிழ் நாட்டில் உரு வாகிட தமிழ்ச் சமுதாயத் தின், அண்ணா விளக்கான தி மு கவை தமிழ் நாட்டு மக் கள் சட்டசபைத் தேர்தலில் வெற்றி பெறச் செய்யவேண் டும்' என்று தி மு க தலைவர் கலைஞர் மு கருணாநிதி நடந்த இரவு வானொலியில் நிகழ்த் திய தேர்தல் பிரசார உரை யில் கூறினார்,

கலைஞர் மேலும் கூறிய தாவது:

'மக்களைத் தேடிச் சென்று பணியாற்றியது எமது கழக ஆட்சி, 20 ஆண்டு காலமாக காங்கிரஸ் ஆட்சி செய்யாத சாதனைகளை நமது ஆட்சி புரிந்தது.

பெண்குலம் தாய்க்குலம்

(6-ம் பக்கம் பார்க்க)



கிளிநொச்சியில் சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் அமைச்சர் செ. குமாரசூரியர், காங்கேசன்துறையில் போட்டியிடும் த. வி. கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கத்துடன் கம்யூனிஸ்ட்கட்சி யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம், தமிழர் சுயாட்சி கழகத் தலைவர் திரு. வி. நவ ரத்தினம், யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் ஆகியோரை படத்தில் காண்க.
[படம்: பிரபா போட்டோ – 'தேவா'[

# 750 பேர் வேட்புமனு தாக்கல்!

# சுயேச்சை 270

## 2இடங்களில்நேரடிப்போட்டி



சாவகச்சேரியில் போட்டியிடும் திரு. வி, ஏ. ஜெரோம், உடுப்பிட்டியில் ஜி. ஜி. காங்கிரஸில் போட்டியிடும் திரு. எஸ. எஸ். சுந்தரம், கோப்பாயில் சமசமாஜக் கட்சியில் போட்டி யிடும் திரு. வி, நடராசா, உடுப்பிட்டியில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் போட்டியிடும் திரு ரி இராஜலிங்கம் ஆகி யோரைப் படத்தில் காண்க
(படம்: பிரபா போட்டோ — 'தேவா')

யாழ்ப்பாணம், செவ்வாய்

அடுத்த மாதம் இருபத்தோராம் திகதி நடைபெறும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் 750 வேட்பாளர்களும் தங்களின் நியமனப்பத்திரங் களை நேற்றுத் தாக்கல் செய்தனர். இவர்களில் 482 பேர் கட்சி சார்பாகவும் 270 பேர் சுயேச்சையாகவும் போட்டியிடுகிறார்கள். நாட்டின் நாலாபகுதிகளிலும் சுமுகமான சூழ்நிலையில் நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யப்பட்டதாகச் செய்திகள் தெரி வித்தன. யாழ்ப்பாணத்திலும் நேற்று அசம்பாவிதம் எதுவும் இடம்பெறவில்லை.

### நேரடிப் பேசட்டி

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கப் பெற்ற செய்திகளின்படி காங் கேசன்துறையிலும் யாப்பகுவ் எனும் தொகுதியிலும் மட் டுமே நேரடிப்போட்டி நடக் கிறது. வேருவளைத் தொகுதி யில்தான் ஆகக்கூடுதலான வேட்பாளர்கள் (பதினாறுபேர் போட்டியிடுகின்றார்கள். இத ற்கு அடுத்ததாக நுவரெலியா மஸ்கெலியா தொகுதியில் 14 பேர் போட்டியிடுகிறார்கள்.

கட்சிரீதியிலான வேட் பாளர்களைப் பொறுத்தவரை ஸ்ரீ ல. சு. கட்சி. 146-லும் ஐக்கியதேசியக்கட்சி 154 லும் ல, ச. ச. கட்சி 82 லும், கம் யூனிஸ்ட்கட்சி 48.லும் மக் கள் ஐக்கிய முன்னணி 26 லும் தமிழர் கூட்டு முன்னணி 24லும் இலங்கைத் தொழி லாளர் காங்கிரஸ் இரண்டி லும் போட்டியிடுகின்றன.



வட்டுக்கோட்டையில் போட்டியிடும் திரு ஏ தியாகராசா. கிளிநொச்சிக் கூட்டணி அபேட்சகர் திரு வி ஆனந்தசங்கரி யுடன் பேசிக்கொண்டிருப்பதையும், கிளிநொச்சியில் போட்டி யிடும் முதலாவது தமிழ்ப்பெண் திருமதி ஞானசங்கரி, ஈழத் தமிழின சுதந்திர முன்னணித் தலைவர் திரு சி சுந்தரலிங்கத் தையும் படத்தில் காணலாம்
(படம்: பிரபா போட்டோ—தேவா)

### சுந்தரர் வாபஸ்

காங்கேசன்துறை தொகுதி யில் போட்டியிட முன்வந்த திரு. சி. சுந்தரலிங்கம் கடைசி நேரத்தில் வாபஸ் பெற்றுக் கொண்டார். அவர் 'வீடு' சின்னத்தைக் கேட்டபோது அது வழங்கப்படவில்லை. அது தமிழரசுக் கட்சிச் சின்னம் என்று தெரிவிக்கப்பட்டது. அவர் தமது நியமனத்தைத வாபஸ் பெறுவதாகத் தெரி வித்து வெளியில் சென்றார்.

வெளியில்வந்த திரு. சுந்தர லிங்கம், துடிதுடிப்புள்ள இளை ஞரான திரு. சிவ. சிறீதரனுக் காக, தாம் வாபஸ்பெற்றுள்ள தாகவும், ஈழத்தமிழின சுதந் திரமுன்னணிசார்பில் தேர்தல் ஆணையாளரிடம் உதயசூரியன் சின்னம் கோரியதாகவும், அது வழங்கப்படாததினால், தேர் தல் ஆணையாளருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யவிருப்ப தாகவும் கூறினார்.

(6-ம் பக்கம் பார்க்க)

தொல்புரம் கிழக்கு பூதாராசி அம்பாள்
சங்காபிஷேகம்
இன்று 7-6-77 செவ்வாய்க்கிழமை
காலை 6 மணி தொடக்கம் சங்காபிஷேகம்
நடைபெறும்.
இரவு 9 மணி தொடக்கம்
இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள
தவில் வித்துவான்
வலங்கைமான்
ஆ. சண்முகசுந்தரம்
கோஷ்டியினரின் தவில்கச்சேரி நடைபெறும். 6381

**மணிவாக்கு**

முழுமையான அகிம்சைக் கண்ணுக்குப் பகைமைசற்றும் தோன்றுவதில்லை. —காந்திமகான்.

ஈழநாடு
THE EELANAADU

# தேர்தல் பொறுப்பு!

மக்களுக்குச் சேவை செய்வதற்காகத் தேசிய அரசுப்பேரவைக்குச் செல்வதற்குப் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்துள்ளவர்கள் நேற்றுத் தமது வேட்பாளர் நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர். வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் தாக்கல்செய்யப்பட்டதுடன் தேர்தல் திருவிழா கொடியேற்றி வைக்கப்பட்டிருக்கின்றது.

இந்தத்திருவிழா சீரும் சிறப்புமாக நடைபெற்று முடியவேண்டுமென்பதே மக்களின் விருப்பமாகும்.

தேர்தல் இப்போது அவசியமில்லை; தேர்தல் வந்தால் அபிவிருத்தித்திட்டங்களைச் செயல்படுத்தமுடியாது என்று கூறியவர்களும் தேர்தலை இன்னும் சில வருடங்களுக்கு ஒத்திவைக்க வேண்டுமென்று கோரியவர்களும் இருக்கிறார்கள்.

தேர்தலை நடத்தாமல் சர்வாதிகார ஆட்சியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுவதாகவும் பிரச்சாரம் தொடங்கியது.

சர்வாதிகாரமல்ல ஜனநாயகமே தமது இலட்சியம் என்று பிரதமர் திருமதி சிறிமா தெரிவித்ததுமட்டுமல்ல அதை நிருபிக்கும் வகையில் தேர்தலுக்கும் திகதியை நிர்ணயித்து அறிவித்தார்.

ஜனநாயகம் வேண்டுமா; சர்வாதிகாரம் வேண்டுமா? என்று ஆளும் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் ஐக்கிய தேசியக்கட்சியும் தமது தேர்தல் பிரசாரத்தில் கேட்கின்றன.

இதுவழமையான கேள்விதான். தேர்தல் முடிவுகள் வெளிவந்தவுடனும் இதே கேள்விகள் வெளிவருவது சகஜம்.

எப்படியும் தேர்தல் வந்துவிட்டது. இந்நாட்டு மன்னர்களான வாக்காளர்கள் அடுத்தமாதம் 21-ந்தேதி தமது உரிமையைச் சரியாகப் பயன்படுத்தவேண்டும்.

பயமுறுத்தலுக்குப் பணிய வேண்டிய அவசியமில்லை; பணத்துக்கு தங்கள் வாக்கை விற்கவேண்டியதுமில்லை.

இந்தத் தேர்தல் மிகமுக்கியமான கட்டத்தில் நடைபெறுகின்றது.

தென்னிலங்கையிலுள்ள முக்கிய அரசியல் கட்சிகள் ஆட்சிபீடத்துக்கு வருவதற்காகப் போட்டியிடுவது மட்டுமல்ல [illegible]த்துக்காகவும், சர்வாதிகாரத்தை எதிர்க்கவும் போட்டியிடுகின்றன என்று சொல்லிக்கொள்கின்றன.

தமிழ்ப்பகுதிகளில் போட்டியிடும் கட்சிகளும் தனிப்பட்டவர்களும் தமிழ்ஈழம் அமைப்பதும் தமிழ்மக்கள் சரிநிகராக வாழவைப்பதும் நோக்கமாகக்கொண்டுள்ளதாக அறிவித்துள்ளன.

இலட்சியங்கள், நோக்கங்கள் எதுவானாலும்ஜனநாயக முறையில் நடைபெறும் தேர்தல் அமைதியாக நடைபெற வேண்டியது அவசியம்.

இப்போதே சில இடங்களில் சிறுசிறு சச்சரவுகளும் வன்முறைச் சம்பவங்களும் நடைபெறுவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவை ஜனநாயகத்திற்கு நல்ல அறிகுறியல்ல. தமிழ் ஈழ இலட்சியத்துக்கும் பொருந்தமாட்டாது.

ஒரே இலட்சியத்தில் போட்டியிடுபவர்கள் எதற்காக வன்முறைச் செயல்களில் ஈடுபடவேண்டுமென்பது புரியாத புதிராக இருக்கிறது.

அமைதியாகத் தேர்தலை நடத்துவதில் வேட்பாளர்களுக்கும் வாக்காளர்களுக்கும் மிகப்பெரும் பொறுப்புங்கடமையுமுண்டு.

இதை அவர்கள் சரிவரச் செய்யவார்களென்றே எதிர்பார்ப்போம்.

## "மனிதன் தெய்வமாக வேண்டும்"

— சிவத்தமிழ்ச் செல்வி

யாழ்ப்பாணம், செவ்வாய் "மனித வாழ்வை நான்கு வகையாகப் பிரிக்கலாம். தெய்வீகம், மனித நிலை, அசுரத் தன்மை, மிருக வாழ்க்கை என்பவையே அவை. இதில் மனிதன் தன்னைத் தெய்வத் தன்மைக்கு உயர்த்திக்கொள்ள வேண்டும். அதுவே நம் பிறவியின் நோக்கம்."

இவ்வாறு சிவத்தமிழ்ச் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, சித்தன்கேணி மகாகணபதிப் பிள்ளையார் கோயிலில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், "நாம் எங்கிருந்தாலுஞ்சரி, எத்தொழில் வசித்தாலுஞ்சரி, இறைவனை வழிபாடாற்றத் தவறுதல் கூடாது. நாம் ஆண்டவனைத் தொழுவதற்கு ஏற்ற தகுதி என்னவெனில் எந்நாளும் இறைவனை வழிபாடாற்றுவதே ஆகும். தவம் என்ற பெருநிலையை நாம் எய்த வழிபாடாற்றுவது முக்கியமாகும். தவம் என்பது யோக நிலையில் நிற்பது மாத்திரமன்று. ஒழுக்க நிலையிலே நின்று மனம் மாசுபடா வாழ்வதும் தவமாகும். வாவென வருந்தியழைத்து ஆண்டவனை வழிபடுகிறவர்களை ஆண்டவன் ஒரு நாளும் கைவிடுவதில்லை" என்றார். (இ)

## இவர்கள் விலகினர்

யாழ்ப்பாணம், செவ். தமிழ் ஈழ விடுதலை இயக்கம் தமிழ் இளைஞர் பேரவையுடன் இணைவதென்று தீர்மானித்துள்ளதை அடுத்து தமிழ் ஈழ விடுதலை இயக்கத்திலிருந்து அதன் முக்கிய உறுப்பினர்களான திரு.அ. வரதராஜாவும் திரு.கி.பிரான்சிஸும் விலகி உள்ளனர்.

திருகோணமலை மாவட்ட ஈழ விடுதலை இயக்க அமைப்பாளர் திரு. பொன்.அன்னலிங்கமும் வேறுசிலரும் ஈழ விடுதலை இயக்கத்திலிருந்து விலகியுள்ளதாக அறிவித்துள்ளார். (சு-இ)

# வேட்பாளர் பட்டியல்

### ஊர்காவற்றுறை

1. பண்டிதர் கா. பொ. இரத்தினம் [கூட்டணி] உதயசூரியன்.
2. வ. நவரத்தினம் [தமிழர் சுயாட்சிக்கழகம்) தராசு.
3. எம். அமிர்தலிங்கம் [யு. என். பி] யானை.
4. யோகேந்திரா துரைசுவாமி [தமிழ்மக்கள்இயக்கம்] கதிரை.
5. ரி. பரநிருபசிங்கம் [சுயேச்சை] மணி.
6. ஏ. கனகரத்தினம் [சமசமாஜக்கட்சி] திறப்பு.
7. பி. கனகராசா [சுயேச்சை] கதிரை.
8. கே. இ. மகாதேவா [சுயேச்சை[ குடை.
9. எம். துரைராஜா [சுயேச்சை[ கண்.

### வட்டுக்கோட்டை

1. ரி. திருநாவுக்கரசு [தமிழர் விடுதலைக் கூட்டணி] உதயசூரியன்.
2. ஏ. தியாகராசா [தமிழ் மக்கள் இயக்கம்] குடை.
3. என். இரத்தினசிங்கம் [யு. என். பி] யானை.
4. வி. தர்மலிங்கம் [சுயேச்சை] பூ.
5. எம். அம்பலவாணர் [இலங்கை இந்திய இணைப்பு இயக்கம்] கப்பல்.
6. வி. இராசசுந்தரம் [சுயேச்சை] தராசு.
7. வி. ஆ. ரத்தாய் (சுயேச்சை) கண்.

### காங்கேசன்துறை

1. ஏ. அமிர்தலிங்கம் [தமிழர் விடுதலைக் கூட்டணி] உதயசூரியன்.
2. சிவ. சிறிதரன் [சுயேச்சை] தராசு.

### மானிப்பாய்

1. வி. தருமலிங்கம் [தமிழர் விடுதலைக் கூட்டணி] உதயசூரியன்.
2. சி. முதலியார் [ஜி. ஜி. காங்கிரஸ்] குடை.
3. அலோசியஸ் இரத்தினம் [யூ. என். பி] யானை.
4. இரத்தினவேல் [சுயேச்சை] ஏணி.

### யாழ்ப்பாணம்

1. வி. யோகேஸ்வரன் [தமிழர் விடுதலைக்கூட்டணி] உதயசூரியன்.
2. ஜி. ஜி. பொன்னம்பலம் [சுயேச்சை] மரம்.
3. சி. எச்ஸ். மாட்டின் [சுயேச்சை] குடை.
4. டாக்டர் ஏ. எல். ஏபிரகாம் [சுயேச்சை] தராசு.
5: ஏ. ஜி. இராஜசூரியர் [சுயேச்சை] கதிரை.
6. எஸ். தர்மலிங்கம் [இலங்கை இந்திய இணைப்பு இயக்கம்] கப்பல்.

### நல்லூர்

1. எம். சிவசிதம்பரம் [தமிழர் விடுதலைக்கூட்டணி] உதயசூரியன்.
2. க. இராமநாதன் [ஜி. ஜி. காங்கிரஸ்] பஸ்.
3. சி. அருளம்பலம் [சுதந்திரக்கட்சி] கை.
4. ஆர். ஆர். தங்கராசா [சுயேச்சை] தராசு.
5. சுப்பிரமணியம் [சுயேச்சை] குடை.

### கோப்பாய்

1. எஸ். கதிரவேலுப்பிள்ளை [தமிழர் விடுதலைக்கூட்டணி] உதயசூரியன்.
2. எஸ். ஜெயதேவன் [தமிழர்சுயாட்சிக் கழகம்] கப்பல்.
3. எஸ். நடராசா [சமசமாஜ கட்சி] திறப்பு.
4. எஸ். ஜெயநாதன் [யு என். பி] யானை.

### உடுப்பிட்டி

1. ரி. இராசலிங்கம் (தமிழர் விடுதலைக் கூட்டணி) உதயசூரியன்.
2. எம். மோதிலால்நேரு [சுயேச்சை) தராசு.
3. ஜே. எஸ். சுந்தரம் [ஜி. ஜி. காங்கிரஸ்] பஸ்.
4. க. பிள்ளையினர் [சுயேச்சை] ஏணி.
5. ஆர். ஆர். தர்மரத்தினம்[சுயேச்சை] விளக்கு.
6. எம். ஞானச்சந்திரன் [சுயேச்சை] மணிக்கூடு.

### பருத்தித்துறை

1. க. துரைரத்தினம்(தமிழர் விடுதலைக் கூட்டணி) -உதயசூரியன்
2. என். நடராசா (சுயேச்சை)-குடை
3. எம். பி. வீரவாகு (சுயேச்சை) -தராசு
4. கே. எஸ். முத்துக்குமாரசாமி (தமிழர் சுயாட்சி கழகம்) -கப்பல்
5. கே. ரி. இராஜசிங்கம் (சுயேச்சை) -கண்

### சாவகச்சேரி

1. வி. என். நவரத்தினம் (தமிழர் விடுதலை கூட்டணி) -உதயசூரியன்
2. வி. குமாரசுவாமி (ஜி. ஜி. காங்கிரஸ்) -தராசு
3. எஸ். பி. மயில்வாகனன் (தமிழர் சுயாட்சி கழகம்)-கண்
4. சதா நடராசா (தமிழ் ஈழ அரசு கழகம்) -விளக்கு
5. கே. ஏ. ஜெயரோம் (சுயேச்சை)-பஸ்

### கிளிநொச்சி

1. வி. ஆனந்தசங்கரி (தமிழர்விடுதலை கூட்டணி) -உதயசூரியன்
2. செ. குமாரசூரியர் (ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி)-கை
3. திருமதி இந்திரபூபதி ஞானசங்கரி (சுயேச்சை) தராசு
4. எம். கனகசூரியர் (யூ. என். பி.)-யானை

### கொழும்பு வடக்கு-1

ஏ. எச். எம். பௌஸி (ஸ்ரீ.ல.சு.க.)
வின்சன் பெரேரா (ஐ.தே.க.)
கே. எஸ். ஆர். பெரேரா (ல ச.ச.க)
டி. எஸ். மல்லவராச்சி (சுயேச்சை)
ஈ. டி. பிரேமரத்ன (சுயேச்சை)
வி. டி. விஜயசிங்க (சுயேச்சை)
ஜி. ரி. ஆரியதாச (சுயேச்சை)

### கொழும்பு மத்தி-2

மொகமட் சலீம் இஷாக் [ஸ்ரீ.ல.சு.க.]
ஆர். பிரேமதாச [ஐ.தே.க]
ஜாபீர் ஏ. காதர் [ஐ.தே.க.]
பீட்டர் கெனமன் [சம்யூனிஸ்ட் கட்சி]
எம். எஸ். செல்லச்சாமி [இ. தொ. க.)
எச். டி. எம். சலீம் [சுயேச்சை]
டபிள்யூ. ஏ. எஸ். பெரேரா [சுயேச்சை]
ஆர். இரத்னசாமி [சுயேச்சை]

### பொரளை-3

பி. ஜே. டி. பெரேரா [ஸ்ரீ. ல. சு. க.[
எம். எச். பெரேரா [ஐ.தே.க]
டி. டி. எஸ். குருகுலசூரிய [ல. ச. ச. க.]
ஏ. ஜி. குருகே [சுயேச்சை]

### கொழும்பு கிழக்கு-4

வி. எஸ். கொடிக்கார (ஸ்ரீ ல சு க]
ஏ. ஈ. சமரவிக்கிரம (ஐ தே க]
பேர்னட் சொய்சா [ல ச ச க]
எம். எச். ஏ. பீரிஸ் [சுயேச்சை]
ஜீ கபசிங்கா [சுயேச்சை]
எம் பி. ஆரியதாச [சுயேச்சை]

### தெஹிவளை-6

டபிள்யு. டி. பெரேரா [ஸ்ரீ ல சு க]
எஸ், டி எஸ். ஜயசிங்கா [ஐ தே க]
ஆர். பிரேம்சிறி [ல ச ச க]
டி. யு. கூரே [சுயேச்சை]

### இரத்மலானை-7

சி. வி. குணரத்ன [ஸ்ரீ ல சு க]
அதுலமுதலி [ஐ தே க]
திருமதி விவியன் குணவர்த்தன [ல ச ச க]
யு. ஜி. ஜி. பீரிஸ் [சுயேச்சை]

### மூதூர்-95

எஸ். எம். மக்கீன் [தமிழர்கூட்டணி]
மஹ்ரூப் [ஐ தே க]
ஏ. எல். அப்துல்மஜீத் ]ஸ்ரீ ல சு க]

### கம்புறுபிட்டிய-71

விக்கிரமசிங்க [ஸ்ரீ ல சு க]
ரி. யு. மல்லவராய்ச்சி [ஐ தே க]
நாணயக்கார [கம்யூ.]

### திருகோணமலை - 94

ஆர். சம்பந்தன் [தமிழர்கூட்டணி]
எஸ். நவராசா [ஸ்ரீ. ல. சுக.]
பேபிசிக்கோ [சுயேச்சை]
நவரத்தினராசா [ஐ. தே க[
குணதாசா [சுயேச்சை]

### தெனியாய—68

ஈ. ஆர். குணதிலகா [ஸ்ரீ. ல. சு. க.]
கே. சி. அபயவிக்கிரம [ஐ. தே. க]
எச். பி. வீரசிங்க [ல. ச. ச. க.]

### தம்புள்ள—37

ரி. பி. தென்னக்கோன் [ஸ்ரீ. ல. சு. க.]
ஆர். எம். எக்கநாயக்க [ஐ. தே. க.]
டி. எஸ். விஜயவர்த்தன [ல. ச. ச. க]
ரி. பி. தென்னக்கோன் [சுயேச்சை]

### ரத்தோட்டை—40

எஸ். பி. யாலேகம [ஸ்ரீ. ல. சு. க.]
பி. பி. கவிரத்ன [ஐ. தே. க]
ரஞ்சித் சேனகஎல்லாவெல [கம்யூ. க.]
உக்குபண்டா தென்னக்கோன் [ம ஐ. மு.]
லய்னல் பெரேரா [சுயேச்சை]
ஜெயவிக்கிரம ரூபசிங்க [சுயேச்சை]

### காலி—65

கிரிஸ்ரியன் ராஜ குலதிலகா [ஸ்ரீ ல சு க]
அல்பேர்ட் டி சில்வா [ஐ. தே. க.]
சிற்பி லெப்பை [ல ச ச க]
டாக்டர் டபிள்யு தகநாயக்கா [சுயேச்சை]

### கரந்தெனிய—60

விஜயதுங்க வில்சன்] [ஸ்ரீ ல சு க]
பந்துல ஹேலாசேனதீர [ஐ தே க]
பிரான்சிஸ் துடாவை [சுயேச்சை]
வில்சன் கருணாரத்ன [சுயேச்சை]
சங். சதாதிச தேரோ [சுயேசசை]
ஆனந்த விஜயரத்ன [சுயேச்சை[

### மாத்தறை-73

பந்துல அபயசூரிய [ஸ்ரீ ல சு க]
நந்தசிறி [சுயேச்சை]
பியதாச [ஐ தே க]
பி. வை. துடாவை [கம்யூ.]
அபேயசிங்கா [சுயேச்சை]

(6ம் பக்கம் பார்க்க)



# எம். ஜி. ஆர். கட்சி மீதும் ஊழல் புகார் உள்ளது?

## வெளியிடஇது சந்தர்ப்பமல்ல

## என்கிருர் மொரார்ஜி



சென்னை, ஜூன் 6

தமிழ்நாட்டில் முன்னர் ஆட்சிசெய்த திராவிடமுன்னேற்றக்கழகத்திற்கு எதிராக மட்டுமல்ல எம் ஜி. ஆரின் கட்சியான அ.இ.அ.தி.மு க. வுக்கு எதிராகவும் பல ஊழல் குற்றச்சாட்டுக்கள் எமக்குக் கிடைத்துள்ளன. ஆனல் அவற்றை வெளியிடுவதற்கு இது உகந்த சந்தர்ப்பமல்ல.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜிதேசாய்சென்னையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டம்ஒன்றில் பேசுகையில் கூறினர்.

தமிழ்மொழிபேசும் மக்கள் மீது மட்டுமல்ல, எந்த மொழி பேசுபவர்கள்மீதும் ஹிந்தி மொழியோ வேறு எந்த மொழியோ திணிக்கப்பட மாட்டாது என்றும் திரு. தேசாய் குறிப்பிட்டார். (இ)

## சஞ்சய் காந்தியின் மாமனுர் துப்பாக்கிக்குப் பலி!'

புதுடில்லி, ஜூன் 6

திருமதி இந்திரா காந்தியின் புதல்வர் சஞ்சய்காந்தியின் மாமனுர் லெப்டினன்ட் கேர்ணல் ரி. எஸ். ஆனந்தி மர்மமான முறையில் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

படுத்த படுக்கையிலேயே மிக அருகே இருந்து இவர் சுடப்பட்டுள்ளார் என்றும்தலையில் உள்ள துப்பாக்கிச் சூட்டுக் காயங்களைவிட வேறு எதுவித காயங்களும் கிடையாது என்றும்பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

ஆனல் இக் கொலைச்கான மர்மம் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. (இ)

## ஹரேகிருஷ்ண விழா

யாழ்ப்பாணம், செவ்வாய்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய முன்றலில் ஹரே கிருஷ்ண கோஷ்டியினர், சென்ற சனிக்கிழமை ஹரே கிருஷ்ணவிழா கொண்டாடினர்.

சுவாமி ஹன்சதூத் மகாராஜ் தலைமையில், ஹரே கிருஷ்ண கோஷ்டியினர் விசேஷ பிரார்த்தனைகளையும், பஜனைகளையும், பஹ்வத்கீதை உபந்யாசங்களையும் நிகழ்த்தினர்.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜெர்மன், மொரிஜியஸ், இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இக்குழுவில் அடங்கியுள்ளனர். முடிவில் திரைப்படக் காட்சியும் இடம் பெற்றது. (ஈ)

# விமானக் கடத்தல் முறியடிப்பு!

பெய்ருட், ஜூன் 6

102 பிரயாணிகளுடன் சென்றுகொண்டிருந்த மத்திய கிழக்கு ஏயர் லைன்ஸ் விமானம் ஒன்று துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதிகளால் கடத்தப்பட்டு குவைத்தில் பலவந்தமாக இறக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பெய்ருட்டிலிருந்து பாக்தாத் சென்றுகொண்டிருந்த இந்த விமானத்தைர் கடத்திய பயங்கரவாதிகள் குவைத்தில் பலவந்தமாக இறக்கினர். எனினும் கடத்தல்காரர்கள் குவைத் அதிகாரிகளிடம் சரணடைந்தனர்.

102 பிரயாணிகளுடன் 10 விமான சிப்பந்திகளும் விமானத்தில் இருந்தனராம். குவைத், சவூதி அரேபியா ஆகிய நாடுகளிடமிருந்து 15 லட்சம் டாலர் பணம் கோரியே கடத்தல்காரர் இவ்விமானத்தைக் கடத்தினராம். (இ)

## "தேசிய ஒருமைப்பாட்டை விரும்பியவர் அண்ணு"

### வானெலியில் ஜெகஜீவன்

சென்னை, ஜூன் 6

''காலஞ்சென்ற தி.மு க. தலைவர் சி. என். அண்ணுதுரை, ராஜாஜி, காமராஜ் போன்ருேர் தமிழ்நாட்டுக்கு மட்டும் உரிய தலைவர்கள் அல்லர். அவர்கள் பாரத தேசத் தலைவர்கள் வரிசையில் வைத்து எண்ணப்படவேண்டியவர்கள்'' என்று கடந்த இரவுவானெலியில் நிகழ்த்திய தேர்தல் பிரசார உரையில் ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் கூறினர்.

திரு. அண்ணுதுரை தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த காலத்தில் அவரை நான் நன்கு அறிவேன். அவர் தேசிய ஒருமைப்பாட்டை விரும்பியவர். தமிழ்நாட்டு மக்கள் கடின உழைப்பாளிகள். கலை, கலாச்சாரப் பெருமை பெற்றவர்கள் என்றும் திரு ஜெகஜீவன்ராம் கூறினர். (உ)

## "உரிமைகளை வென்றெடுக்க நாம் ஒன்றுபட வேண்டும்"

### தாதிய சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரை

யாழ்ப்பாணம், செவ்வாய்

''தமிழ்பேசும் தாதிய உத்தியோகத்தர்கள் தங்கள் உரிமைகளை வென்றெடுப்பதற்கு இனிமேலும் யாரையும் நம்பியிருக்காமல் நாம் அனைவரும் ஒன்று கூடிப் போராடுவதே ஒரு வழியாகும். அதன் நோக்கமாகவே இன்று தமிழ்பேசும் தாதிய உத்தியோகத்தர்கள் அனைவரும் ஒன்றுகூடி அரசாங்கப் பொதுத் தாதிய உத்தியோகத்தர்கள் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்து கொள்கிறேம். இச்சங்கத்தை வலுப்படுத்தித் திடப்படுத்தி எங்கள் பிரச்னைகளைத் தீர்க்கவும். எங்கள் உரிமைகளை வென்றெடுக்கவும் நாம் எல்லோரும் ஒத்துழைக்கவேண்டும்.''

மட்டக்களப்பு மெதடிஸ்த வித்தியாலயத்தில்நடைபெற்ற அரசாங்கப் பொதுத் தாதிய உத்தியோகத்தர்கள் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த திரு நா. மயில்வாகனம் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவனியா, மன்னர் மாவட்டங்களில் உள்ள பிணிதீர்மனைகளைச் சேர்ந்த தமிழ்த் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். திருமதி முத்துலிங்கம் கூட்டத்திற்குத் தலைமைதாங்கினர்.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர்: திருமதி ஏ. முத்துலிங்கம், உப தலைவர்: திருமதி எஸ். மார்க், செயலாளர்: திரு. மை. வை. கொரையிரா உப செயலாளர்: திரு ம. மார்க்கண்டேயர், பொருளாளர்; திரு. ஆ. மஃறூப். மற்றும் 10 செயற்குழு உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டனர். (இ)

......

## சந்தேகநபர் கைது

சாவகச்சேரி, திங்கள்

சுண்டிக்குளம் கொலை சம்பந்தமாகக் கிளிநொச்சிப் பொலிசாரால் தேடப்பட்டு வந்த த. பூபாலு என்பவரைச் சாவகச்சேரிப் பொலிஸ் சார்ஜன்ட் கே. வீரசிங்கம் சாவகச்சேரியில் வைத்துக் கைதுசெய்து கிளிநொச்சிப் பொலிசாரிடம் ஒப்படைத்தார்.

இந்தச் சந்தேகநபரைக் கிளிநொச்சிப் பொலிசார் நீண்டகாலமாகத் தேடிவந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (மட்டு-நிருபர்)

# "எமது தமிழ்ஈழ தாகத்தை உலகுக்கு உணர்த்துவோம்!"

## எழுச்சி மாநாட்டில் 'நவம்'

சாவகச்சேரி, திங்கள்

''சுதந்திர தமிழ்ஈழ உதயத்திற்காக ஓயாது. உழைத்தவர்கள் எமது முப்பெருந் தலைவர்கள். இவர்கள் அடுத்தடுத்து தமது உயிரையே அர்ப்பணித்துள்ளனர். எமது முப்பெரும் தலைவர்களும் தம் உயிரைப் பணயம் வைத்து உருவாக்கிய ஒற்றுமையை நமது தமிழன் ஒவ்வொருவரும் மனதிற்கொண்டு, உழைக்கமுன்வர வேண்டும். இந்த சர்வஜன வாக்கெடுப்பில் எமது சுதந்திர தமிழ் ஈழத்தையே நாம் அடையத் துடிக்கிறேம் என்பதை அகில உலகிற்குமே உணர்த்தியாக வேண்டும்''

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற தமிழ்இளைஞர் பேரவையின் எழுச்சிமாநாட்டில் உரைநிகழ்த்திய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு மு. சிவசிதம்பரம் கூறினர். தமிழ்இளைஞர்பேரவை பிரதம அமைப்பாளர் திரு. மு. பாலரத்தினம் தலைமையில், சாவகச்சேரி சந்தை மைதானத்தில் இந்த எழுச்சி மாநாடு நடைபெற்றது. திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து கூறியதாவது:

''அரசியலைத் துறந்து அஞ்ஞானவாசம் செய்பவர்கள் தேர்தல்காலங்களில் மட்டும் ஓடிவந்து, கூட்டணி உருவானது எப்படி, யாரால் என்ற கேள்விகளைக் கேட்கிருர்கள். 1972ல் தமிழ்க்காங்கிரஸ் கூட்டணியில் சேர்ந்தது. திருமலை மாநாட்டிற்குச் சென்றது. இதுபற்றிய கூட்டச் செயலாளர் ஆண்டறிக்கையில் தலைவர் ஜி ஜி.பொன்னம்பலம் கையெழுத்திட்டது. இதுவெல்லாம் 'காலத்திற்சக்காலம் தேர்தல்காலத்தில் மட்டும் தலையைக் காட்டுவோருக்கு எப்படித் தெரிய முடியும்?

### ஜி. ஜி. மறுக்கவில்லை

''தலைவர் திரு. ஜி. ஜி. கூட்டணியில் சேர்ந்ததாக அறிக்கைகள் விடவுமில்லை. ஒரேமேடையில் பேசியதும் இல்லை என்று கூறுகிருர்கள். 1971ல் வட்டுக்கோட்டை மாநாட்டில், திருவாளர்கள் ஜி. ஜி, தந்தை செல்வா, தொண்டமான் ஆகியோர் முக்கூட்டுத் தலைவர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இதை பத்திரிகைகள் வெளியிட்டன. இதை அமரர் ஜி. ஜி. ஏற்காவிடில். அவர் கண்டிப்பாக எதிர்த்து அறிக்கைவிட்டிருப்பார்,

### மறக்கமுடியாத சம்பவங்கள்

''ட்றயல்'' அட்பாரில் தலைவர் ஜி. ஜி. ஏனைய தலைவர்களும், 55 சட்டத்தரணிகளும் இரவு பகல் சலியாது உழைத்தார்களே, அப்பொழுது இன்று உரிமைகொண்டாடும் திரு. குமாரசாமி எங்கே, என்ன செய்துகொண்டிருந்தார்? இப்படியிருக்க, இன்று ஒற்றுமை குலைப்புப் பணியில் வரிந்து கட்டிக்கொண்டு நிற்கும் திரு குமாரசாமி, உண்மையிலே நவம் தேர்தலை விட்டு ஒதுங்கினல், தான் மெதுவாகப் புகுந்து கொள்ள ஓடிவந்தார் என்பதை அவர் மறந்தாலும், மக்கள் மறக்கமாட்டார்கள். அரைமந்திரிப்பதவிக்காக தலைவரை துச்சமாக மதித்தவர். இந்த உண்மையையும் மக்கள் மறக்கமாட்டார்கள். ஆகவே தமிழினம் தன்னைத்தானே ஆளவேண்டும் என்று துடிக்கும் இன்று நடைபெருப் இந்த சர்வஜனவாக்கெடுப்பு இது என்பதை எமது சிங்கத் தமிழன் ஒவ்வொருவனும் மறந்துவிடக்கூடாது''

கிளிநொச்சி வேட்பாளர் திரு. வீ. ஆனந்தசங்கரி பேசுகையில்,

''அன்று அமரத்துவமெய்திய மூதறிஞர் தந்தை செல்வா தமிழினத்தை ஆண்டவன் தான் காப்பாற்றவேண்டும் என்று துயரப்பட்டார். அவர் ஏன் அப்படிச் சொன்னர் என்பதன் அர்த்தம் இப்பொழுதுதான் புரிகிறது. சிங்கள அரசு தரப்படுத்தல் என்ற போர்வையின் கீழ் தமிழினத்தின் ஆயிரக்கணக்கான டாக்டர்களை, பொறியியலாளரை, இன்னும் ஆயிரக்கணக்கான உத்தியோகங்களை இழக்கச்செய்துள்ளது. தமிழனுக்கு இருந்த அற்ப சொற்ப உரிமைகளையும் பறித்து, சிங்களம் மட்டும் ஆட்சிமொழியென அரசியல் சாசனத்தையும் செய்தது. இதை அழித்து சுதந்திர தமிழ்ஈழத்தை அமைக்கவே தந்தை செல்வா அயராது உழைத்தார். ஈற்றில் தன் உயிரையும் அர்ப்பணித்தார். அந்த உத்தம தந்தையின் ஆத்மசாந்திக்காக நாம் எமது உயிரை அர்ப்பணித்தேனும் சுதந்திரதமிழ்ஈழத்தை மலரவைக்கவேண்டும்'' என்று கூறினர்.

மாவை சேனாதிராஜா பேசுகையில், ''தமிழன் ஈழத்தின் ஆதிக்குடிகள். அவனுக்கு ஈழத்தில் உரிமை உண்டு ஆகவே தமிழராகிய நாங்கள் எம்மை நாமே ஆளவேண்டும். சிங்களவர் அவர்களது பங்கை ஆளட்டும். எமது பங்கை எம்மிடம் விட்டுவிடட்டும். ஆகவே நமது சுதந்திர தமிழ் ஈழமலர்ச்சிக்காகத் தலைவர்கள் மட்டும் ஒன்றுபட்டால் போதாது தமிழினமும் ஒன்றுபடவேண்டும் என்ருர்.

### ஒற்றுமை வேண்டும்

சாவகச்சேரி வேட்பாளர் திரு வ. ந. நவரத்தினம் பேசுகையில்,நாம்சுதந்திரதமிழ்

(4-ம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்கள் இயக்கம்

தமிழர்கள் ஒரு புராதன இனத்தவர்கள். அவர்களுக்கென்று ஒரு புகழ்பூத்த வரலாறும் கலாச்சாரமும் உண்டு. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே அவர்கள் இலங்கையில் வாழ்ந்துவருகின்றார்கள் என்பதையும் அவர்களுக்கென்று ஒரு தனிராச்சியம் இங்கு இருந்தது என்பதையும் வரலாறு காட்டுகின்றது. இன்றும் அவர்கள் தங்கள் தேசிய தனித்துவத்தையும். ஒரு வளமான மொழியையும், கலாச்சாரத்தையும் ஒரு தனிப்பட்ட பிரதேசத்தையும் பேணிவருகின்றார்கள். அவர்கள் தனி நாடுஒன்றை அமைப்பதற்குரிய சகல தகைமைகளையும் கொண்டுள்ளார்கள். ஐக்கிய நாட்டுச் சாசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி சுயநிர்ணய உரிமையும் அவர்களுக்குண்டு.

இலங்கையிலே தமிழும் சிங்களமும் பேசும் இருதேசிய இனங்கள் உள்ளன. மேலைத்தேயக் குடியேற்றஆட்சியாளரின் வருகைக்கு முன்னர் இவ்விரு இனங்களும் தத்தமக்கென்று தனித்தனி இராச்சியங்களைக் கொண்டிருந்தன. சுதந்திரத்துக்கான போராட்டத்தில் இருதேசிய இனங்களின் தலைவர்களும் பங்களிப்புச் செய்துள்ளனர். தமிழும் சிங்களமும பேசும்மக்களிடையே பொதுவான அம்சங்கள் பல உள்ளன. தமிழ் மொழியிலும் சிங்கள மொழியிலும் அநேகமான பொதுச் சொற்கள் காணப்படுகின்றன. இரு இன மக்களினதும் பண்பாட்டுக் கோபங்களில் பெருமளவு ஒப்புமைகள் உள்ளன. இரு இனமக்களும் சித்திரை மாதத்திலேயே புத்தாண்டு கொண்டாடுகின்றனர். வேதாந்த மெஞ்ஞானத்தையும் அடிப்படையாகக் கொண்ட சைவத்தையும் பௌத்தத்தையும் இந்நாட்டுத் தமிழரும் சிங்களவரும் தத்தம் சமயங்களாகக் கொண்டுள்ளனர்.

— யோகேந்திரா துரைசுவாமி —

(தலைவர் – த. ம. இயக்கம்)

பொதுவான பண்புகள் பலவற்றைக் கொண்டுள்ள தமிழரும் சிங்களவரும், சுயாதீனம் சமத்துவம் நீதி ஆகியவற்றின் அடிப்படையில் உறவுடையவர்களாய் ஒரே அரசின் கீழ் வாழமுடியும். ஒரு இனம் மற்ற இனத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவது நிறுத்தப்படவேண்டும். பரஸ்பர நல்லெண்ணமும் புரிந்து கொள்ளும் மனப்பாங்கும் வளர வேண்டும். அதுவே நல்லுறவுக்கு வழிவகுக்கும். அண்மைக்காலங்களில் குறிப்பாக நாடு சுதந்திரம் பெற்றபிறகு, தமிழ் மக்களதும் சிங்கள மக்களதும் தலைவர்கள் பரஸ்பர நம்பிக்கையையும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வதையும் பேணுவதில் தோற்றுவிட்டனர். குறிப்பாக தூரதிருஷ்டி அற்ற இனநலன்களால் உந்தப்பட்ட சிங்களத் தலைவர்களின் நடவடிக்கை தேசிய ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளைவித்துள்ளன.

## தமிழ் மக்களின் இன்றைய நிலை

தமிழ்மக்களின் இன்றைய நிலைமை என்ன? அரசியல் ரீதியிலும் பொருளாதார ரீதியிலும் அவர்கள் பின்தங்கியுள்ளார்கள். சுதந்திரத்துக்குப் பின் ஆட்சிக்கு வந்த எல்லா அரசாங்கங்களும் அவர்களின் வளர்ச்சியைப் பாதித்துள்ளன. பிரதானமாக சிங்களப் பிரதேசங்களிலேயே அரசாங்க உதவி பெற்ற பொருளாதார அபிவிருத்திகள் நடைபெற்றுள்ளன. தகுதி பிரதான அளவுகோலாகக் கருதப்படாமையினால், உயர்கல்வி நிறுவனங்களுக்கான அனுமதியும், வேலைவாய்ப்புகளும், அவர்களுக்குப் பெருமளவு மறுக்கப்பட்டுள்ளன தமிழ் மொழி இந்நாட்டில் வாழும் முப்பது வீதமான மக்களின் தாய்மொழியாக இருந்தபோதிலும், அதற்கு உரிய இடம் அளிக்கப்படவில்லை. சுதந்திரம் வழங்குவதற்குமுன், இந்நாட்டின் அரசகரும மொழியாக சிங்களமும் தமிழும் இருக்க வேண்டும் என்று இலங்கை அரசாங்க சபையில் தீர்மானிக்கப்பட்டது. தமது வியர்வையினாலும் கடின உழைப்பினாலும் இந்நாட்டின் பொருளாதாரத்தை நிலைநிறுத்துவதற்கும், நீண்டகாலமாகப் பெரிதும் பாடுபட்ட மலைநாட்டுத் தமிழ்த் தொழிலாளரின் வாழ்க்கை, நிலச்சீர்திருத்த நடவடிக்கைகளினால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நாட்டில் சட்டங்களை ஆக்கவும் இந்நாட்டுமக்களின் வாழ்க்கையை



ஒழுங்குபடுத்தவும்பூரண ஆதிக்கம்பெற்ற தேசிய அரசுப் பேரவையில் 13 வீதமான தமிழ் அங்கத்தவர்கள் மட்டுமே உள்ளனர். தமிழ்த் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமைபறிக்கப்பட்டது இன்று தேசிய அரசுப் பேரவையில் அவர்களின் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் யாரும் இல்லை. அவர்களுக்குரிய ஆசனங்கள் சிங்களப் பிரதிநிதிகளுக்கே கொடுக்கப்பட்டுள்ளன. இத்தகைய பெரும்பான்மை முக்கியத்துவம் அரசியல் சித்தாந்தத்தில் நாம் கேள்விப்படாத ஒரு கருத்தாகும்.

## திட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும்

தமிழர்களின் நெருக்கடியான இந்த வரலாற்றுக் கட்டத்தில், அவர்களின் திட்டங்கள் எவ்வாறு அமையவேண்டும்? நமது திட்டங்கள் குறுங்காலத் திட்டங்களாகவும் நெடுங்காலத் திட்டங்களாகவும் வகுக்கப்படவேண்டும். எமது குறுங்காலத் திட்டங்கள் எம்மை அரசியல், பொருளாதார, சமூக ரீதியாக பலப்படுத்துபவையாகஅமையவேண்டும். அவ்வாறு அமையின், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எம்மை எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு நாம்திட்டமாக முகம் கொடுக்கமுடியும். அத்துடன் இலங்கையில் சுதந்திரமும்சமத்துவமும் உள்ள பிரஜைகளாக ஏனைய மக்களுடன் சமாதானமாகவும்மகிழ்ச்சியாகவும் வாழ முடியும். நீண்டகால அரசியல் திட்டங்கள் இப்போதே தீர்மானிக்கப்படக்கூடியவை அல்ல. அவ்வாறுசெய்வது தமிழர்களின் நலனுக்கு உகந்ததும் அல்ல. தேசிய, சர்வதேசிய ரீதியிலான பல்வேறு காரணங்கள், அத்தகைய ஒரு தீர்மானத்தைப் பின்போடுவதற்கு நம்மைத் தூண்டுகின்றன. இவற்றைப் பற்றி இப்போது தீர்மானிப்பதற்கு ஒரு சரியான தருணம் இன்னும் வரவில்லை. அது அவசரப்பட்ட, உணர்ச்சிவசப்பட்ட முடிவாக இருக்கக் கூடாது. பதிலாக நிதானமான அறிவின் அடிப்படையிலும் தமிழ்மக்களின் நீண்டகால நலனின் அடிப்படையிலும் அமையவேண்டும்.

விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான இயக்கங்கள் கடின உழைப்பின் மீதும் இரத்தத்தின் மீதுமே நிறுவப்படுகின்றன. தேர்தல் மேடைகளில் கோஷம் போடுவதனாலோ சில சலுகைகளுக்காக அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதனாலோ அல்ல. தேசப்பிரிவினை தாம்பாளத்தில் வைத்துத் தரப்படும்ஒன்றல்ல. அது போராடி வெல்லப்படவேண்டியது. அதற்கான போராட்டம், அடிமட்டத்தில் இருந்து ஆயத்தப்படுத்தப்படவேண்டும். சுதந்திரக்கோயில் படிப்படியாகவேகட்டப் படவேண்டும். ஒருமித்த நோக்கம், தியாகம், கட்டுப்பாடு, கடின உழைப்பு ஆகிய விடுதலை இயக்கத்தின் தலைமைப் பீடத்துக்குரிய அடிப்படைப் பண்புகளாக இருக்கவேண்டும். எடுத்தகாரியத்தை நிறைவேற்றப்போதிய ஆயத்தங்கள் செய்யாது வாக்குறுதிகளைக்கொடுத்து மக்களை பிழையான வழியில் இட்டுச் செல்வது அவர்களுக்குப் பெரும் தீங்கையே விளைவிக்கும்?

## குறுகியகாலத் திட்டங்கள்

எமது இலட்சியத்தின் பொருட்டு தியாகம், கட்டுப்பாடு ஆகிய உணர்வுகளை வளர்த்தெடுப்பதற்காக அரசியல் ரீதியாக நாம் நம்மை ஒழுங்கமைத்துக் கொள்ள வேண்டும். இத் தன்மைகள் இல்லாது எந்த திட்டங்களையும் நிறைவேற்றமுடியாது நமது ஸ்தாபனம், ஏனைய அரசியல் கட்சிகள் செல்வதைப் போன்று தேர்தல் ஆசனங்களை வென்றெடுப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டிருக்கக் கூடாது. நமது இயக்கம் தனது கொள்கைகளுக்கும் நோக்கங்களுக்கும் இணங்கும் எல்லாத் தமிழர்களையும் இணைத்துக் கொள்ளும். இளைஞர்களின் ஆர்வம் ஆக்க பூர்வமான முடிவை நோக்கி முறையாகத் திருப்பப்படும். ஒழுங்கும் கடின உழைப்பும் அவர்களுக்கு உணர்வுறுத்தப்படும். அவர்களது கடந்த காலச் செயற்பாடுகளின் அடிப்படையில் முக்கியபதவிகளுக்கு அவர்கள் தூண்டப்படுவார்கள்.

நமது சமூகத்தில் உள்ள முதியவர்கள் தங்கள் பொறுப்புகளைத் தட்டிக்கழிக்காது தங்கள் அனுபவத்தையும் அறிவையும் தமிழர்களை உயர்த்தும் உன்னத பணிக்கு வழங்கவேண்டும். தமிழ்க்கலாச்சாரமும் வரலாறும் நமது முதியவர்களின் ஞானத்தினாலும் விவேகத்தினாலும் ஒளிபெறும் பல உதாரணங்கள்உள்ளன.

அரசியல் ரீதியாக நாம் பின்வருவனவற்றுக்காகப் பாடுபடுவோம்.

தமிழினத்தை கட்டுப்பாடு, சுயசார்பு, சுதந்திரம் ஆகியவற்றினால் பலப்படுத்துதல். (2) இலங்கைவாழ் சகல மக்களினதும் நலனுக்காக உழைத்தல் (3) நமது அயல்நாடுகளுடன் நல்லுறவைப் பலப்படுத்த உழைத்தல். (4) உலகின் எல்லாப்பகுதிகளிலும் அடிப்படை மனித உரிமைகளைப்பெறவும் ஒருநீதியான சர்வதேச ஒழுங்கை நிறுவவும் உழைத்தல்.

இக் குறுகியகாலத் திட்டங்களைச் செயற்படுத்த முனையும் அதே வேளை, பின்வருவனவற்றைப்பெறவும் பாடுபடுவோம்.

(அ) பிரதேச சுயாட்சி

(ஆ) இலங்கை அரசியல் யாப்பில் பின்வருவனவற்றைச் சேர்த்தல்: (i) தமிழையும் தேசிய மொழியாக்குதல், (ii) இலங்கையின் எப்பாகத்திலும் தமிழ்பேசும் மக்கள் அரசாங்கத்துடன் தமிழில் தொடர்பு கொள்ளுதல், (iii) பாரம்பரியமான தமிழ்ப் பகுதிகளில் தமிழே நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் இருத்தல் (iv) ஐக்கிய நாடுகள் மனித உரிமைச் சாசனத்தை நடைமுறைப்படுத்தல் அவசியமானால் இவ்வுரிமைகளை நீதிமன்றத்தின் மூலம் பெறுதல்.

(இ) அரசாங்க சேவையில் தொழில்வாய்ப்புபெறுவதிலும் பாடசாலைகளிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் அனுமதி பெறுவதிலும் இன, மொழி, மத வேறுபாடுகளை நீக்குதல்.

(ஈ) தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களில் தமிழர் அல்லாதவர்களை அரசாங்க உதவியுடன் குடியேற்றுவதை நிறுத்துதல்.

(உ) இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் தமிழும் சிங்களமும் கற்பித்தல்.

## அபிவிருத்திக்கு ஐந்தாண்டுத்திட்டம்

பொருளாதார ரீதியாக, சுயசார்புடையவர்களாக இருக்கக் கூடிய வகையில் நமது பாரம்பரியப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய ஐந்தாண்டுத் திட்டம் ஒன்று வகுக்கப்படும். நமது தொழில் அதிபர்களும் வர்த்தகர்களும் தங்கள் சேமிப்புகளை, தமிழ்ப் பகுதிகளில் இலாபகரமான உற்பத்தித் துறைகளில் முதலீடு செய்ய ஊக்கப்படுத்தப்படுவர். உணவில் தன்நிறைவு அவசியம்.

சமுதாய ரீதியில், ஒருமைப்பாட்டுக்காக நாம் உழைப்போம். நமது சமூகத்தில் உள்ள பிரிவுகள் முறைப்படி அகற்றப்படும்; ஒருமைப்பாடும் தோழமை உணர்ச்சியும் நம் மக்கள்மத்தியில் புகுத்தப்படும். இச் செயற்பாட்டில் கசப்பும் நெடுநாளைய வெறுப்பும் வளர அனுமதிக்கப்பட மாட்டாது. விழிப்புணர்ச்சியுற்ற சுயவிருப்பே இதற்கான உந்துசக்தியாக அமையும் ஒழுக்கமும் கலாச்சார விழுமியங்களும் முன்னெடுக்கப்படும் தமிழினத்தை புனர் அமைப்பதில் அவை முக்கிய பங்கு வகிக்கும்.

இவ்வழியில் நாம் நம்மைப் பலப்படுத்தி சுயசார்பும் சுதந்திரமும் உள்ள ஓர் இனமாக எழுச்சியுறுவோம். நம்மைப் புறக்கணித்து அடக்கி ஒடுக்க முனையும் எந்த அரசாங்கமும் அதன்பிறகும் அவ்வாறு செய்ய முனைந்தால், அதன் வீழ்ச்சிக்கே அதுவழி அமைக்கும்.

இந்த நூற்றாண்டின் முதல் முப்பத்தைந்து ஆண்டுகளிலும் தமிழ்த் தலைவர்கள் தங்கள் இனத்தை வெற்றிகரமாக வழி நடத்தியது மட்டுமன்றி இலங்கையின் சுதந்திரப் போராட்டத்திலும் முக்கியமான பாத்திரம் வகித்தனர். ஆனால் பிற்காலத்தில் நமது தலைவர்கள் அகில இலங்கை விவகாரங்களை ஒழுங்கமைப்பதில் முக்கியமானபங்காற்றத்தவறியது மட்டுமன்றி, தமிழர்களின் நலன்களைத்தானும் பாதுகாக்க முடியாது போயினர். உலகின் மிகப் பழைய மொழியைப்பேசுகின்ற மக்களாக இருந்தும், தெற்காசிய, தென்கிழக்காசிய, மேற்காசியா நாடுகளை உருவாக்குவதில் உதவிய கலாச்சாரத்தையும் செல்வாக்கையும் கொண்டவர்களாய் இருந்தும், இன்று நாங்கள் புறக்கணிக்கப்பட்ட நிலமிழந்த உதவியற்ற மக்களாக பின் தள்ளப்பட்டுள்ளோம்.

ஒரு பெரிய இனம் நீண்டகாலம் அடக்கியாளப்படமுடியாது. தன்நிலை உணர்வு விரைவில் உதயமாகும். புதிய தலைமை தோன்றி தனது மக்களை சுயமதிப்பு, சுயசார்புப் பாதையில் வழிநடத்திச் செல்லும்.

## வேலரும் மயிலரும்




வேலர்: தேர்திருவிழாவிற்கும் தேர்தல் திருவிழாவிற்கும் ஒரு வித்தியாசமுண்டு.

மயிலர்: என்னது?

வேலர்: தேர் திருவிழாவில் சர்க்கரைத்தண்ணி சுயநலம் கருதாமல் ஊத்துறது. தேர்தல் திருவிழாவில் சாராயத்தண்ணி சுயநலம் கருதி ஊத்துறது.

—சுந்தர்

## எமது...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஈழம் அமைப்பதற்கு தமிழ் மக்களிடத்தில் ஒற்றுமைவேண்டும், அன்று தமிழ் ஈழம் சாதிக்கமுடியாத செயல் எனறு கூறியவர் இன்று அதுவே தமது இலட்சியமும் என்கிறார்கள். அண்மையில் எனதுதொகுதியில் நடைபெற்ற ஆசிரிய நியமனங்கள் மிகவும் நேர்மையின் அடிப்படையிலேயே நடந்தது. ஆனால் அதில் பொய் வதந்திகளை சேர்த்து மக்கள் மத்தியில் குழப்பத்தை உண்டாக்க முயலுகிறார்கள் வாலிபர் இப்படியான பொய்வதந்திகளை நம்பி ஏமாந்துபோகக் கூடாது.'' என்றார்

திரு, சி. யோகராஜா பேசுகையில் கூறியதாவது: ''அன்று குடியரசு தினத்தை சுதந்திர தினமாக சிங்கள அரசு கொண்டாடியபோது, தமிழ்க்கட்சிகள் அதை எதிர்த்து கூட்டம் நடத்தி அதில் சுயாட்சிக் கழகமும் ஒன்று இக்காலத்தில், சாவகச்சேரி டிறிபேக்கல்லூரியில், கூட்டுறவுச்சங்கத் தலைவராக நியமனம் பெற்ற' சிங்கள அரசின் சுதந்திரதினத்தைக் கொண்டாடிய திரு. சி. பொ. மயில்வாகனம், இன்று நானும் சுதந்திர ஈழம் கோருகிறேன் என்கிறார்.''

திரு. நாகேஸ்வரன், திரு. பா. வை. ஜெயபாலன், திரு. சிவதாசன், திரு. வண்ணை ஆனந்தன் உட்படப்பலர் பேசினர். (மட்டுநிருபர்)

# 'கூட்டணியை ஜி. ஜி. ஆதரித்தார்'

யாழ்ப்பாணம், திங்கள்
'அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் நிர்வாகசபை, தமிழர் விடுதலைக்கூட்டணியில் அங்கம் வகுக்கும்தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றிய பின் அந்த அறிக்கையில் அமரர் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கையொப்பமிட்டார். இதை அறியாத பலர் திரு. பொன்னம்பலம் தமிழர்விடுதலைக்கூட்டணியை ஆதரிக்கவில்லையெனப் பேசுவது வேதனைக்குரியது' என்று நல்லூர்த் தொகுதி கூட்டணி வேட்பாளர் திரு. மு. சிவசிதம்பரம், யாழ். கோணந்தோட்ட சந்தியில், யாழ்ப்பாணக் கூட்டணி வேட்பாளர் திரு. வெ. யோகேஸ்வரனை ஆதரித்து நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

இக்கூட்டத்துக்கு முன், வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலிருந்து நூற்றுக்கணக்கான தொண்டர்கள், மங்கள வாத்தியத்துடன் திரு. வெ. யோகேஸ்வரனை ஊர்வலமாக கூட்டமைதானத்துக்கு அழைத்து வந்தனர். எஸ். ரி. ஆர். பிலிம்ஸ் அதிபர் திரு. சி. தியாகராசா கூட்டத்துக்குத்தலைமை வகித்தார்.

திரு. மு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில், 'அமரர் ஜி. ஜி. பொன்னம்பலத்தால் அரசியலுக்கு அழைக்கப்பட்ட திரு. வி. குமாரசுவாமி, 52-ம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்று, 53ம் ஆண்டு அரசியலை அவமதித்து தன் விச்சையாக நடந்தவர். இன்று தமிழ்க்காங்கிரஸ் கட்சியையே தூற்றுமளவிற்கு, தமிழ்ஈழக் காங்கிரஸ் கட்சியை உருவாக்கி ஜி. ஜி. யின்புகழ் பாடுகின்றார்.' இது வேதனைக்குரியது' என்று கூறினார்.

திரு. மு. ஆலாலசுந்தரம் பேசுகையில், 'ஒவ்வொருதமிழ் மகனும், தமிழர் விடுதலை என்ற கட்டுக்கோப்புக்குள் கட்டுப்பட்டு, விடுதலைபெற தமிழர்விடுதலைக்கூட்டணிக்குவாக்களித்து எமது இனவிடுதலை உணர்வை உலகறியச்செய்ய வேண்டும். சிலர் நினைப்பதைப் போல பத்திரிகை அறிக்கைகளுடனே, சொகுசான வாழ்வுடனே காலத்தைக் கடத்த முடியாது. விடுதலைபெறுவதற்கான உறுதியெடுப்பதே எமது

தேர்தல் முடிவுகள் காட்டும்' என்றார்.

திரு. வண்ணை ஆனந்தன் பேசுகையில், 'தமிழினம்இன்று விழித்துவிட்டது. தனது நிலையை உணர்ந்துவிட்டது. வாக்களிக்கும் பக்குவநிலையை அடைந்து, பயனுளமுறையில் வாக்களிக்கும் நாம், மாற்றுரை குறைகூறுமல், எமது லட்சியங்களை ஒவ்வொரு இல்லமாகச் சென்று எடுத்தியம்புவோம். இதுவே தமிழினத்துக்கு நாம் செய்யும் கைமாறு' என்றார். கூட்டத்தில் ஜனுப் ஜலீல் திரு. சபா செந்தூர்ராஜா, திரு. அழகையா உட்பட கூட்டணி பிரமுகர்களும், இளைஞர் பேரவை உறுப்பினர்களும் பேசினர்கள்.
(கெ)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

இந்துக்கல்லூரிக்கும் இந்து மகளிர்கல்லூரிக்குமிடையில் 76/2, அரசடி வீதி-வண்ணார் பண்ணையில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. எழுதுக: 5, இராமகிருஷ்ண டெறேஸ், வெள்ளவத்தை, கொழும்பு-6. 6382

''நீமியா உரம்'' மண்ணை வளம்படுத்தி, அதிக விளைவைத் தந்து பயிர்களைப் பாதுகாக்க சிறந்த ''நீமியா பசளையை பாவியுங்கள். மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம். 6383

எட்டாம்வகுப்பு புதிய கணிதப்பயிற்சி இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது. 21 அலகுகளுக்கு பல்தேர்வு வினவிடை விலை 4-75 ஸ்ரீகாந்தா அச்சகம் - புத்தகசாலை 213, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6378

### பயிற்சி

வெல்டிங் (Electric & Gas) இலெக்றிக் வயறிங் ரேடியோ (Transistor) PMG Certificate வகுப்புகள். கல்வி இலாகாவினுல் தொழிற்பயிற்சி நிலையமென அத்தாட்சிபெற்ற இலங்கையின் ஒரே தனியார்துறை நிலையம் இதுவே. O/L, A/L, GAQ B.A. ஆங்கில வகுப்புகள் ஆங்கில (சிறப்பு) பட்டதாரியினுல் நடாத்தப்படும். National Institute of Engineering Technology. மயிற் மண்டபம் 128, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். 6365


வெலிங்டன் [யாழ். நகர்]
ரஞ்சன் நடித்த
தினசரி 3, சனி ஞாயிறு 4 காட்சிகள்
நீலமலைத்திருடன்

லிடோ போன்: 7693 (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி — சாவித்திரி நடித்த
வடிவுக்கு வளைகாப்பு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி — சாவித்திரி நடித்த
கப்பலோட்டிய தமிழன்
10-6-77 முதல் சிவாஜி கணேசனின் வைர நெஞ்சம்

REGAL (JAFFNA)
Daily: 4-45, 7-00 & 9-30 p. m.
YOU ONLY LIVE ONCE
(color)
Next attraction
OMAR SHARIF in
The Tamarind Seed
(Color)

சாந்தி யாழ். நகர் போன்; 7642
தினசரி 4 காட்சிகள் 10-30, 2-30, 6-30, 9-30
முத்துராமன் ° சௌகார் ° மேஜர் ° பாலையா ° நாகேஷ் நடித்த
கே. பாலசந்தரின்
பாமா விஜயம்
(புதிய பிரதி)

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 கட்சிகள்
சிவாஜி கணேசன், உஷா நந்தினி, சௌகார் ஜானகி (இருவேடங்களில்)
மனிதனும் தெய்வமாகலாம்
(ஈஸ்ட்மன் கலர்)

கடைசி வாரம்
மனோகரா (யாழ்ப்பாணம்)
எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா விரப்பா - நிர்மலா நடித்த
தினசரி 4 காட்சிகள்
இதயக்கனி
(ஈஸ்ட்மன்கலர்)

ராணி (யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். — லதா (இருவேடங்கள்) நடித்த
தினசரி 4 காட்சிகள்
நாளை நமதே
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மாவிட்டபுரம்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
A. V. M. ராஜன் - லக்ஷ்மி
அகத்தியர்

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி, ஞாயிறு 10-30
ஜெமினி — சரோஜாதேவி
பணமா பாசமா

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
விஜயகுமார்-சுஜாதா
அவள் ஒருதொடர்கதை

புதியமுறையில் ஒரே தனிப் பிரதியாகத் தயாரிக்கப்பெற்ற
மாணவர் மதிப்பீட்டுப் பதிவேடு
1, 2, 3, 4, 5 ஆம் வகுப்புக்கள். விலை ரூ. 3-00.
3, 4, 5 ஆம் வகுப்புக்கள் விலை ரூ. 1-50.
4-ம், 5 ஆம் வகுப்புக்கள் விலை 75 சதம்.
சொற்ப பிரதிகளே கைவசம் உள.
சுன்னுகம் தனலக்குமி புத்தகசாலை

பாம்கோ சஞ்சீவி லேகியம்
டாக்டர் K. பரமானந்தம்
R. I. M. P. (Ceylon) Dip. L. M. P. H. (India)
அவர்களின் மேற்பார்வையின்கீழ் விசேடமாகத் தயாரிக்கப்பட்டது.
இதன் முக்கிய குணங்களாவன:
ஸ்திரீபுருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேககாந்தியையும் உண்டாக்க வல்லது மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த மருந்தாகும்.
1 ரு — 40/-
½ ரு — 15/-
நேரில் தொடர்பு கொள்ளவும்:
பாம்கோ இண்டஸ்ரீஸ்,
28/3, 3-ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்.
6384

மலேஷியன் கைமார்க் சாம்பிராணி
கிடைக்குமிடம்:
சென்ற் அந்தனிஸ் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் லிமிட்டெட்
கொழும்பு-10
போன்: 24261—5

RIO (Jaffna) Daily 4 Shows
STOP, LOOK & LAUGH
(நில்லுங்கள்-பாருங்கள்-சிரியுங்கள்)
ஆரம்ப முதல் முடிவுவரை வயிறு குலுங்கச் சிரிக்க வைக்கும் 'ஜெறி' என்னும் பொம்மையின் சாகசச் செயல்களைப் பாருங்கள்.
From: 9-6-77
Caravan to Vaccares
(Western)
(Look out for Thrills & Actions)

"திருவருள்" புரியும் பக்திரசமான 5-வது வாரம்
ராஜா (யாழ்நகர்) போன்: 7180
தினசரி 4 காட்சிகள்
ஏ.வி.எம்.ராஜன், கிருபானந்தவாரியார் நாகேஷ், 'சுந்தரராஜன், நடித்த
தேவரின் திருவருள் (ஈஸ்ட்மன் கலர்)
குறிப்பு: பாடசாலை மாணவர்களுக்கு விசேட ஆசனங்கள் ஒதுக்கிக் கொடுக்கப்படும். நிர்வாகத்துடன் முன்கூட்டியே ஒழுங்குசெய்துகொள்ளலாம்.

ஈழநாடு

The EELANADU

# "தமிழர் ஒற்றுமையை யாரும் சிதைக்க முடியாது"

## தெங்கு பனம்பொருள் கூ. ச சமாஜ செயலாளர் முழக்கம்

யாழ்ப்பாணம், செவ். 'வடபகுதியில் வாழும் ஐந்து லட்சம் சிறுபான்மைத் தமிழ் மக்களும் அமையப்போகும் தமிழ் ஈழத்திற்காகத் தோளோடு தோள்நின்று போராடும்நிலையை உருவாக்கும் வாய்ப்பு உடுப்பிட்டித் தொகுதி மக்களுக்குக் கிடைத்துள்ளது. விசேஷமாக இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம் உடுப்பிட்டித் தொகுதித் தேர்தலை ஒரு இலட்சியப் போராட்டமாகக் கருதிச் செயற்படுவது குறித்து அவர்களுக்குச் சிறுபான்மைத் தமிழர் சமூகம் தலைவணங்குகிறது'.

இவ்வாறு தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச்சங்கசமாசச் செயலாளரும் ஆசிரியருமான திரு. க. நடராசா உடுப்பிட்டியில் நடைபெற்ற இளைஞர் கருத்தரங்கொன்றில்பேசுகையில் தெரிவித்தார்.


அவர் மேலும் பேசுகையில் 'ஒன்றரைலட்சத்துக்கு மேற்பட்ட சிறுபான்மைத் தமிழ்ச் சமூகவாக்காளர், கூட்டணியின்பக்கம் நிற்கிருர்கள். தமிழ் சமுதாயத்தின் ஒற்றுமையை இனி 'யாராலும் அசைக்கமுடியாது' என்ருர். (அ)

## இன்று அன்னதானம்

யாழ்ப்பாணம், செவ். யாழ். கோட்டை முனியப்பர் ஆலயத்தில் இன்று நண்பகல் அன்னதானம் வழங்கப் படவிருக்கிறது. விஞ்ஞானி சி. நாகராசாவின் 4-வதுஆண்டு நினைவாக இவ்அன்னதானம் வழங்கப்படுகிறது. (ஈ)

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய் அராலி ஆவரம்பிட்டி அம்பாள் சங்காபிஷேகம் இம்மாதம் 13ந் திகதி நடைபெறும். பகல் விசேஷ பூசைகளை அடுத்து அன்னதானம் இடம் பெறும்.



தமிழர் விடுதலைக்கூட்டணி அபேட்சகர்களான திருவாளர்கள்: ஏ. அமிர்தலிங்கம், எம் சிவசிதம்பரம், வி. யோகேஸ்வரன் எஸ். கதிரவேலுப்பிள்ளை வி. என். நவரத்தினம், கே. துரைரத்தினம், வி. ஆனந்தசங்கரி, ரி. திருநாவுக்கரசு, வி. தர்மலிங்கம், ரி. ராஜலிங்கம், பண்டிதர் கா. பொ. ரத்தினம் ஆகியோருடன் திரு. எஸ், சந்திரகாசனும் மற்றும் ஆதரவாளர்களும் காணப்படுகின்றனர். படம்: பிரபா போட்டோ - 'தேவா,

நாலாவது ஆண்டு

# நினைவாஞ்சலி

## சி. நாகராஜா (விஞ்ஞானி)

எமது இல்லத்தில் ஒளிவிளக்காக நின்று என்றும் ஒளிதரும், எம தன்புச் செல்வமே! நீர் எங்களை விட்டுப் பிரிந்து, இன்றுடன் 4-வது ஆண்டு பூர்த்தியாகின்றது. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(இன்று (7-6-77) யாழ். கோட்டை முனியப்பர் ஆலயத்தில் நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும். இதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத்தருகின்றோம்.)



தகவல்:- தாயாரும்- சகோதரர்களும்,

6388

# மரண அறிவித்தல்

## திரு. சந்திரசேகரம்பிள்ளை கதிரவேற்பிள்ளை

அல்வாயைப் பிறப்பிடமாகக்கொண்டவரும், யாழ்ப்பாணம் 4-ம் குறுக்குத்தெரு 24-ம் இலக்க வீட்டுரிமையாளரும் முன்னுள் P. W. D. ஓவசியரும், பிரபல அரசாங்கக் கட்டிட ஒப்பந்தகாரருமான திரு. சந்திரசேகரம்பிள்ளை கதிரவேற்பிள்ளை 5-6-77ல் காலமானுர். இவர் சின்னம்மா, (இளைப்பாறிய ஆசிரியை)வின் அன்புக்கணவரும், அரியரத்தினம் (கனடா) அரிமலர் (ஆசிரியை-பலாங்கொடை) பரிபூரணம், அரியராசா,. அரியதேவி ஆகியோரின் அருமைத்தந்தையும், கனகசிங்கம் (ஆசிரியர் - பலாங்கொடை) இராமச்சந்திரன் (எழுதுநர்-மாநகரசபை யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமனுரும், யாதவன், இராகுலன், ஜெகராம் ஆகியோரின் அன்புப் பேரனுமாவர். ஈமக்கிரியைகள் அவரது இல்லத்தில் (7-6-77) இன்று (செவ்வாய்க்கிழமை) மாலை 3-30 மணியளவில் ஆரம்பமாகி தகனக்கிரியைகள் வில்லூன்றி மயானத்தில் நடைபெறும்.

6386

## வேட்பாளா—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### முல்லைத்தீவு

எக்ஸ். எம். செல்லத்தம்பு (தமிழர் கூட்டணி)
பி. சந்திரசேகரி (சுயேச்சை)
ஆர். விக்னராஜா (சுயேச்சை)
வி. சந்திரசேன (சுயேச்சை)

### வவுனியா

த. சிவசிதம்பரம் (தமிழர் கூட்டணி)
குலேந்திரன் (ஐ தே க)
சுபசிங்கா (சுயேச்சை)

### மட்டக்களப்பு

செ. இராசதுரை (தமிழர் கூட்டணி)
கே. காசி ஆனந்தன் (தமிழரசு)
ஜனுப் பதியுதீன் மஹ்மூத் (ஸ்ரீ ல சு க)
பி. ஆர். செல்வநாயகம் (ஸ்ரீ ல சு க)
அகமட் பரீத் (ஐ தே க)
கே. விஞயகமூர்த்தி . (சுயேச்சை)

### கல்குடா

சி. சாம்பமூர்த்தி (தமிழர் கூட்டணி)
கே. டபிள்யூ. தேவநாயகம் ஐ தே க)
மாக்கான் மரைக்கார் (ஸ்ரீ ல சு ச)

### மன்னுர்

பி. எஸ். சூசைதாசன் (தமிழர் கூட்டணி)
அப்துல் ரஹீம் (ஐ தே க]
எம். கந்தசாமி (சுயேச்சை)
ஜோன் மார்க் (சுயேச்சை)

### பட்டிருப்பு

கணேசலிங்கம் பூபாலபிள்ளை (தமிழர் கூட்டணி)
இ. பொன்னம்பலம் (ஐ தே க)
சி. சோமசுந்தரம் (ல ச ச க)
சோ. தம்பிராஜா (ஸ்ரீ ல சு க)

### நுவரெலிய-மஸ்கெலிய

அசோகா [சுயேச்சை]
அபயசிங்க (சுயேச்சை[
டி ஐயாத்துரை [சுயேச்சை]
ஏ அஸீஸ் [சுயேச்சை]
பி பி ஆரியதிலக [கம் யூ)
ஜெயதிலக [சுயேச்சை]
கல்பனே (சுயேச்சை)
எஸ். தொண்டமான் (இ தொ கா அரசியல் பிரிவு)
காமினி திஸநாயகா [ஐ தே க)
பத்திரான (சுயேச்சை)
ஞெபேட் பெரேரா [சுயேச்சை)
அனுரா பண்டாரநாயகா (ஸ்ரீ ல சு க)
ரத்னபால [சுயேச்சை)
சாந்த சிறில் (சுயேச்சை[

### அத்தனகல

சிறிமாவோ பண்டாரநாயக்கா [ஸ்ரீ ல.சு க]
செனிவரத்தின [ஐ தே க]
சந்திரா குண சேகரா [ல ச ச க[
தம்புகல [கம் யூ]
[மிகுதி நாளை]

## முகிலைக்—

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று பேசியவர்கள் இந்திரா ஆட்சி முடிவுக்கு வந்ததும் சட்டசபைத் தேர்தலில் அந்த வார்த்தைகளை பாவிப்பதையே விட்டுவிட்டார்கள். நேரத்துக்கு ஒரு கொள்கை, வேளைக்கு ஒரு இலட்சியம் என்ற இவர்களின் போக்கை கோமாளித்தனமான முரண்பாடுகளை. மக்கள் உணரத் தவறமாட்டார்கள்.

டில்லி அரசுக்கு சலாம் போட்டவர்கள், ஒப்பந்தத்தில் ஒருலட்சம் ரூபாவுக்குக் கையெழுத்திட்டுவிட்டு கறுப்புப்பணமாக 10 லட்சம் ரூபா பெறுபவர்கள், அந்நியசெலாவணி மோசடியில் ஈடுபட்டவர்கள் இன்று சத்தியம் என்றுபேசி உத்தமர் வேஷம் போடுகிருர்கள்.

இந்த ஏமாற்றுக்காரர்களின் கட்சி என்ன கும்பகோணம் ஏரியா, கபாலீஸ்வரர் தீர்த்தமா சேர்ந்தவர்கள் புனிதம் பெற்று புண்ணியவான்களாகி விடுவதற்கு?

முகிலைக்கிழித்துவரும் முழுமதிபோல் புறப்பட்டது தி மு க. இந்திணிப்பை எதிர்ப்பது தி மு கதான் என்ற பெருமை கவுக்கே உண்டு தமிழருக்குத் தரமான வாழ்வுதந்தது தி மு தி முக. தமிழுக்காக எத்துன்பத்தையும் தாங்கிட கழகம் தயாராக இருக்கிறது.

எதிர்வரும் சட்டசபைத் தேர்தலில் தமிழ்நாட்டில் மூன்று அணிகள் போட்டியிடுகின்றன நாம் தனிஅணி,

ஜனநாயகத்தைக் காத்து சேர சோழ மன்னர் காலத்து பெருமை நிலை பெற்றிட நம்மவர்ஆட்சி மலரட்டும், (உ.)

## 750 பேர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

### நேரடிப் போட்டி

காங்கேசன்துறைத் தொகுதி சுயேச்சை அபேட்சகருக்கான நியமனப்பத்திரமொன்றில் 'சீல்' இடப்படவில்லையெனக் கிளப்பப்பட்ட ஆட்சேபம் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இங்கு தமிழர் விடுதலைக் கூட்டணி வேட்பாளர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திற்கும் சுயேட்சை வேட்பாளர் திரு. சிவசிறீதரனுக்கும்நேரடிப்போட்டி ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத் தொகுதியில் போட்டியிடும் திரு. சி. எக்ஸ். மாட்டின், திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம், திரு ஏ ஜி இராசசூரியர் ஆகிய மூவரும் 'குடை' சின்னத்தைக் கோரினுர்கள். சீட்டுக் குலுக்கிப் பார்த்தபோது திரு சி எக்ஸ் மார்ட்டினுக்கே குடைகிடைத்தது.

சட்டத்தரணி வி நடராசா திரு சி எக்ஸ் மார்ட்டின் நியமனப்பத்திரத்தில் அத்தாட்சி பற்றி ஆட்சேபமொன்றைக் கிளப்பினுர். அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை யாழ்ப்பாணத்தொகுதியில், இலங்கை இந்திய இணைப்பு இயக்கச்சார்பில் போட்டியிடும் திரு. தர்மலிங்கம் கதர் உடையணிந்து காந்திக்குல்லா போட்டுவந்திருந்தார்.

முன்வரிசையில் கூட்டணி அபேட்சகர் திரு வி யோகேஸ்வரனும், சுயேச்சையாகப் போட்டியிடும் திரு ஜி ஜி பொன்னம்பலமும் அருகருகில் அமர்ந்து அளவளாவிக்கொண்டிருந்தனர். அவருக்கு அருகில் திரு வி தர்மலிங்கமும், திரு ஏ ஜி இராசசூரியரும் அமர்ந்திருந்தனர். ... ...

## இன்றிரவு எம்.ஜி.ஆர். பேசுகிருர்

சென்னை. ஜூன் 6

திரு எம் ஜி ராமச்சந்திரன் நாளை இரவு 8-30க்குவானொலியில் இரண்டாவதுதடவையாக தேர்தல் பிரசாரஉரை நிகழ்த்துகிருர். (உ)

## வகுப்புக்கள்

I. A. A. (எக்கவுண்டன்சி) H. N. C. E. (வர்த்தக, விஞ்ஞானம்) வகுப்புகள் ஆரம்பம், 10-6-77.

அதிபர்:

யாழ். சட்ட நிலையம்
பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

6387

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் வெண்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு ஜூன் மாதம் 7-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O. Box 49, Jaffna: Telegram Eelanaadu Telephone 389 Registered as a News paper in Sri Lanka.